# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
### IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.C.C. 588/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.2 |
| Name | : | .ஆறுமுகம் |
| Father's Name | : | த.பெ.சொக்கலிங்கம் |
| Village | : | . வங்காரம், காமராஜ் நகர் |
| Taluk | : | .வந்தவாசி |
| Calling | : | . |
| Religion | : | இந்து |
| Age | : | .59 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 10.04.2026.

**எதிரி ஆஜர்.**

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன நபர் காசி ஆவார். அ.சா.1 தண்டபாணி அவரது மகன்.சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்பு எனது அண்ணன்பைக் விபத்தில் இந்துவிட்டாா. தேதி ஞாபகம் இல்லை. அந்த விபத்து நடந்த நாள் போகி பண்டிகை ஆகும். அன்று மாலை 6.00 மணி அளவில் மாம்பட்டு கிராமம் சந்திப்பில் பொங்கல் பண்டிகைக்கு பொருட்கள் வாங்க சென்ற நபரை நீதிமனற்த்தில் ஆஜரில் உள்ள எதிரி இருக்கர வாகனத்தில் வந்து நடந்துவந்துக்கொண்டிருந்த எனது அண்ணனை இடித்துவிட்டார். எனது அண்ணன் கீழே விழுந்து முகத்தில்

அடிப்பட்டுவிட்டது. நான் அவரை வந்தவாசி அரசமருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துவந்து பின்பு செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்றோம். அங்குஇரவு 11.30 மணி அளவில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். அ.சா.1க்கு மேற்படி விபத்து சம்மந்தமாக நான்தான் தகவல் சொன்னேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

சம்பவம் நடந்த சமயத்தில் நான் எங்கு இருந்தேன் என்றால் ஆவணவாடியில் இருந்தேன். நான் விபத்தை நேரடியாக பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. விபத்திற்கு பிறகுதான் சம்பவ இடத்திற்கு வந்தேன். சம்பவ சமயத்தில் சாலை பணி நடந்துக்கொண்டிருந்ததா என்றால் இல்லை. விபத்தில் இறந்துபோன எனது அண்ணன் சைக்கிளில் செல்லும்போது தடுமாறி கீழே விழுந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல, அவர் நடந்துதான் சென்றார். எதிரியினால் எந்தவொரு விபத்தும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை.**

இல்லை.

// உண்மை நகல் //

Taken down by me in Open Court, Read over to the witness and Admitted by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.